காண்பித்தாலோ அல்லது விவசாயிகளே நேரடியாக முன்வந்து ஒரு இடத்தைக் காட்டி, அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்ட அனுமதி அளிக்கிறேன் என்று அவர்களே கடிதம் கொடுத்தாலோ, அந்த இடத்தில் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாகக் கட்டிக் கொடுக்கும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கட்டி முடிக்கப்பட்ட ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் இடிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கோடிட்டுக் காட்டினார்கள். அது இன்னும் எங்களின் கவனத்திற்கு வரவில்லை. அதுபோன்ற ஒரு நிலை வராது. அப்படிப்பட்ட நிலை வந்தால், அதற்கு மாற்று நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 55, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

55—

கூட்டுறவுச் சங்கம்

***12775—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் பட்டு மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியில் பட்டு மற்றும் கைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு போளூர் சட்டமன்ற

உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் புதிய பட்டு மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்திட கோரிக்கை ஏதும் இதுநாள் வரை பெறப்படவில்லை. புதிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க முதன்மை அமைப்பாளரிடமிருந்து பிரேரணை ஏதும் வந்தால், பெறப்பட்டால், 1983 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதிகளுக்குட்பட்டு, புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

முற்பகல் 10–45

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைர விழா நாயகன், எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு கழக செயல் தலைவர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) திருவண்ணாமலை சட்டப் பேரவை உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். போளூர் தொகுதியில், போளூர், குன்றத்தூர், மண்டகுளத்தூர், மாம்பட்டு, எழுவாம்பாடி, புதுப்பாளையம், பால்வார்த்துவென்றான், கீழ்ப்பட்டு, வடமாதிமங்கலம் போன்ற ஊராட்சிகளில் சுமார் 1,500 பட்டு நெசவுத் தறிகள் இயங்கி வருகின்றன. மேலும், இங்கே சுமார் 500 கைத்தறிகளும் இயங்கி வருகின்றன. போளூர் தொகுதியில் வாழும் பட்டு மற்றும் நெசவுத் தொழில் செய்யும் குடும்பங்களின் வாழ்வாதாரம் உயர்வதற்காக போளூரில் பட்டு மற்றும் கைத்தறி கூட்டுறவுச் சங்கம் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து இதுவரை துறைக்கு எந்தப் பிரேரணையும் வரவில்லை. கோரிக்கை வருமாயின், கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.*

திரு. கே.வி. சேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போளூரில் நல்ல முறையில் இயங்கி வந்த பட்டு மற்றும் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கமானது 1987 ஆம் ஆண்டு முதல் மூடப்பட்டு உள்ளது. பட்டு மற்றும் நெசவுத் தொழில் செய்து வருபவர்கள் மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்வதற்காக ஆரணி, காஞ்சிபுரம் போன்ற நகரங்களுக்குச் சென்று தனியாரிடமிருந்து பெற்று வருகின்றனர். தனியாரிடம் கொள்முதல் செய்வதால், நெசவாளர்களுக்கு ஊதியம் மிகவும் குறைவாகக் கிடைக்கிறது. ஆகவே, போளூரில் பட்டு மற்றும் கைத்தறி கூட்டுறவுச் சங்கம் அமைத்தால், இப்பகுதியில் பட்டு மற்றும் நெசவுத் தொழில் செய்து வருபவர்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை அரசு கூட்டுறவுச் சங்கத்தில் பெற்று, உற்பத்தி செய்து, அதே கூட்டுறவுச் சங்கத்தில் வழங்கி, அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள முடியும். மேலும் புதிய கூட்டுறவுச் சங்கம் அமைந்தால், அதில் பணிபுரிய 10–க்கும் மேற்பட்டவர்களுக்கு அரசுப் பணியும் கிடைக்கும். வரும் காலக்கட்டத்தில் பட்டுத் தொழிலும், நெசவுத் தொழிலும் நசுங்காமல் இருப்பதற்கும், அந்தக் குடும்பத்தினரின் வாழ்வாதாரம் உயர்வதற்கும் போளூரில் பட்டு உற்பத்தியாளர் மற்றும் கைத்தறி நெசவு கூட்டுறவுச் சங்கம் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில் 28 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இதில் 3 சங்கங்கள் புதியவை. ஒரு சங்கம் செயல் இழந்திருக்கிறது. மீதி*

இருக்கிற 24 சங்கங்களும் 100 சதவிகிதம் இலாபத்தில் இயங்குகிற சங்கங்களாக திருவண்ணாமலையில் இயங்கி வருகின்றன என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை ஏற்கப்படும், ஏற்கப்படும் என்று இரண்டு முறையும் தெரிவித்துவிட்டேன். மூன்றாவது முறையும் கோரிக்கை வைத்திருக்கின்றார். இப்போதும் அந்தக் கோரிக்கை ஏற்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

வேளாண்மைக் கல்லூரி

***4251—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இருந்தாலும், மறைந்தாலும் பேர் சொல்ல வேண்டும்; இவர்போல யார் என்று ஊர் சொல்ல வேண்டும்" என்ற உயர்ந்த எண்ணத்தோடும், (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்த*